PATHMA SOMAKANTHAN
Editor - "PENNIN KURAL"
215 G 1/1, PARK ROAD
COLOMBO - 5


# கண்டி இலக்கியச்செய்தி மடல்

7

ஆசிரியர்:- இரா. அ. இராமன் - துணை ஆசிரியர் இக்பால் அலி

மாத இதழ் | ஜுலை–ஆகஸ்ட் 1997 | அன்பளிப்பு ரூபா 10.00


# மணிவிழாக் காணும் பேராசிரியர் சி. தில்லைநாதன்





உள்ளக் கமலத்தே உண்மை மலரட்டும்
கள்ளம் அகன்று காரிருள் நீங்கட்டும்
எங்கள் நாட்டிலும் சீரொடு சேரட்டும்
நற்றவ மேலவர் நலத்தொடு வளர்த்த்
விற்பன அறிவும் வீறுசால் நெறிகளும்
சங்கம மாகிச் சத்தியம் செழிக்கட்டும்

என்னும் பொருள் பொதிந்து, விரிந்த உள்ளத்தை வேண்டி நிற்கும் கவிதைக்கு உரித்துடையவர் யாரென நீங்கள் வினவலாம். அவர் வேறு யாருமல்லர். அவர் ஒரு நாடறியாக் கவிஞர். ஆனால் கற்றோர் அறிவர். அவர் யாழ்ப்பாணம் சுன்னாகத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். ஸ்கந்தவரோதாயாக் கல்லூரியில் பயின்றவர். ஒரேற்றர் சுப்பிரமணியத்தின் நல் மாணாக்கர். பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் மொழியைச் சிறப்புப் பாடமாகப் பயின்றவர். பேராசிரியர்களான வி. செல்வநாயகம், சு. வித்தியானந்தன், ஆ. சதாசிவம் ஆகியோரிடம் பயின்றவர். சென்னைப் பல்கலைக்கழகத்தில் முதுகலைமாணிப் பட்டம் பெற்றவர். பேராசிரியர் மு. வரதராஜரின் நல்மாணாக்கர். பேராசிரியர் க. கைலாசபதி, பொ. பூலோகசிங்கம், கா. சிவத்தம்பி முதலானோர்களின் நண்பர் குழாத்தினுள் ஒருவர். முற்போக்குச் சிந்தனையுடையவர். பொதுவுடைமைக் கருத்தில் பற்றுக் கொண்டவர். ஆனாலும் ஆத்மீகத்தைப் புறந்தள்ளியவரல்லர். ஆய்வறிவாளன், நல்ல திறனாய்வாளன், நல்ல கவிஞன், நல்ல நாடக ஆசிரியன். நல்லாசிரியன், பேராதனைப் பல்கலைக்கழகத்தில் தமிழ் பேராசானாகத் திகழ்பவர் அவர்தான் சி. தில்லைநாதன் ஆவார்.

பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்கள் தமிழ் ஆங்கில மொழிகளில் நன்கு தேர்ச்சி பெற்றவர். சிங்கள மொழி அறிந்தவர். மானுடத்தை நேசிக்கும் நல்ல உள்ளம் கொண்டவர். மானுடன் நசுக்கப்படும் பொழுதெல்லாம் அதற்காகத்தனது உணர்வுகளை வெளிப்படுத்தத்தக்கவர். பிறர் பால் அன்பு செலுத்துவதிலும் பிறர்க்கு உடன் உதவுவதிலும் எதிரி மீது குணங் கொள்வதிலும் அவருக்கு நிகர் அவர்தான். படோபகாரமற்றவர், பாத்திரம் அறிந்து பிச்சை கொடுத்தல் என்னும் மகா வாக்கியத்தில் நம்பிக்கை கொண்டவர்.

*இரா. வை. கனகரத்தினம்*

பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்களின் மணிவிழாவை மிகச் சிறப்பாக கொண்டாட பேராதனைப்பல்கலைக்கழகத் தமிழ்த்துறை ஏற்பாடுகளை செய்து வருகின்றது. மணிவிழாக் காணும் அன்னாரை கௌரவிக்கும் முகமாக அதனையொட்டி கண்டி இலக்கியச் செய்தி மடல் முன் பக்கத்தில் அன்னாரைப் பற்றிய சில குறிப்புக்களை வெளியிடுகின்றது.

*– ஆசிரியர் –*

## பேராசிரியர் சி. தில்லைநாதன் மணிவிழாக்குழு

பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்களின் மணிவிழா சம்பந்தமாக ஒரு ஆலோசனைக் கூட்டம் அண்மையில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறை நடந்தது. இவ்வாலோசனை கூட்டத்தில் பல குழுக்கள் அமைக்கப்பட்டது.

1– விழா ஏற்பாட்டுக்குழு
2–விழா மலர்க்குழு
3– தொடர்புச்சாதனக்குழு
4– பொதுக்குழு
5– கலைநிகழ்ச்சிக்குழு

எதிர்வரும் ஒக்டோபர் மாத முற்பகுதியில் நடைபெறவுள்ள இவ்விழா பொதுக்குழு அமைக்கும் முகமாக கண்டியைச் சேர்ந்த பெரியார்கள், வர்த்தகர்கள், கலை இலக்கியவாதிகள், இலக்கிய அமைப்புக்கள், சமூக அமைப்புக்களை கொண்ட குழு அமைப்பதென முடிவு எடுக்கப்பட்டுள்ளன.

## வாழ்த்துவோம்! அவரது மணிவிழாவில் ஒன்று கூடுவோம்

கவிதை, சிறுகதை, ஆய்வு நாடகம், திறனாய்வு போன்றத் துறைகளில் முத்திரை பதித்த பேராசிரியர் சிறந்த மேடைப்பேச்சாளர் அல்லாவிடினும் அமைதியான பேச்சாளர், கருத்துக்களை உள்ளத்தில் பதியக்கூடிய அளவில் பேசக்கூடிய ஒருவர், புத்திஜீவிகளை உருவாக்கும் பல்கலைக்கழக பேராசிரியர், தமிழ் அறிஞர், இவரது மணிவிழாவில் கலந்து நாமும் சிறப்பிக்க வேண்டாமா? அவ்விழாவிலே கலந்து சிறப்பிக்க அன்போடு இப்போதே அழைக்கின்றோம்.

## பேராசிரியர் சி. தில்லைநாதன் ஒரு கவிஞருமாவார்

"மானிடத்திற்கு மாவட்டபுரத்தின் சவால்," "உள்ளங்கள் விரியட்டும்," "பொங்கும் கவிதை பொலிந்தது" போன்றத் தலைப்புக்களில் கவிதைகளும் எழுதியுள்ளார்.

## பேராசிரியர் தில்லைநாதன் அவர்களுக்கு மணிவிழா

இவ்வாண்டு மணிவிழாக் காணும் கலா கீர்த்தி பேராசிரியர் தில்லைநாதன் அவர்களுக்கு கண்டி மாநகரில் பெரும் விழா எடுக்க ஏற்பாடுகள் நடைபெறுகின்றது. அண்மையில் பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்த்துறையில் கலந்துரையாடல் நடைபெற்றது. இம்மணி விழாவை மிகச் சிறப்பாக நடாத்திடவும், பெறுமதி வாய்ந்த மலர் ஒன்றினை வெளியிடவும் முடிவு எடுக்கப்பட்டது. மணிவிழாக்குழு, மலர் வெளியீட்டுக்குழு, தொடர்புச்சாதனக்குழு போன்ற குழுக்கள் அமைக்கப்பட்டது. மலையகத் தலைநகரில் நீண்ட காலமாக கல்வி, கலை இலக்கியப்பணிகளை ஆற்றிவரும் ஒரு தமிழ் அறிஞருக்கு எடுக்கும் விழா தமிழுக்கு எடுக்கும் விழாவாகும். நாடறிந்த, நாடு மதிக்கும் ஒருவருக்கு நடக்கும் இம்மணிவிழா சிறப்பாக நடக்க வாழ்த்துகின்றோம்.

## பேராசிரியர் எழுதி வெளியிட்ட நூல்கள்

"வள்ளுவர் முதல் பாரதிதாசன் வரை" "சமுதாய இலக்கியம்" ஆகிய நூல்களை எழுதி 67-ம் ஆண்டுகளில் வெளியிட்டுள்ளார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்டி இலக்கியச்செய்தி மடல்

**நூறு மலர்கள் மலரட்டும்**
**நாறும் கீழ்மைகள் தகரட்டும்**

தொடர்புகளுக்கு
ஆசிரியர்
18/13, பூரணவத்தை
கண்டி

மே–ஜுன் 1997


## ஆசிரியர் கருத்து

### இரண்டாவது தமிழாராய்ச்சி மாநாடு

மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு
மாத்தளை, நாவலப்பிட்டி, நூரலை
நகரங்களில் நடைபெறும்.
முதலாவது மலையக சாகித்திய விழா
மலையகத் தமிழாராய்ச்சி மாநாடு போன்ற காத்திரமான
நிகழ்வுகளை நடாத்தி
தமிழ் மொழிக்கு, தமிழ் அன்னைக்கு
மகுடம் சூடியவர்
எங்கள் அமைச்சர் புத்திரசிகாமணி அவர்கள்.
தமிழ் இலக்கியம் மாத்திரமல்ல, ஆங்கில
இலக்கியங்களையும் கற்றவர்.
மலையகத்தில் தமிழ் பேச்சாளர்களில்
இவரும் ஒருவர்.
மலையகமே நான்தான், நானே மலையகம்
என்று செயல்படுபவரல்ல இவர்
மத்திய மாகாண சாகித்திய மதியுரைக்குழு
ஒன்றினை அமைத்து முழுப்
பொறுப்பையும் தந்தவர்,
இலக்கியவாதிகளை நேசிப்பவர்,
அவர்களின் இலக்கியப் பணிகளை மதிப்பவர்,
மற்றவர்களை கவரும் தன்மை கொண்டவர்.
இந்த பண்பின் காரணமாகத்தான்
அவரோடு இலக்கியவாதிகள் பலர்
இணைந்துள்ளோம்.
அமைச்சர் அவர்கள் தமிழ் அன்னைக்கு
இன்னுமொரு மகுடம் சூடப்போகின்றார்.
கொட்டகலையில்
"மலையக ஆவணக்காப்பகம்" ஒன்றினை
அமைக்கும் முயற்சியில் ஈடுபட்டு
செயல் வடிவம் கொடுத்துள்ளார்.
மதியுரைக் குழுவினர்களாகிய எங்களை
கொட்டகலைக்கு
அழைத்துச் சென்று காப்பகம் அமையவிருக்கும்
இடத்தை பார்வையிடச் செய்தார்.
இதற்கான அடிக்கல் நாட்டு விழா
விரைவில் நடைபெறவுள்ளது.
அமைச்சரின் இம்முயற்சி வெற்றிபெற
வாழ்த்துகின்றோம்.
மலையகத் தமிழாராய்ச்சி மாநாட்டின்
முதல் நிகழ்வாக 25. 07. 1997 அன்று
மாத்தளை மாநகரில் நடைபெறும்.
பேராசிரியர் க. அருணாசலம் அவர்கள்
தலைமையில் நடைபெறும் இக்கருத்தரங்கில்
கவிஞர் சு. முரளிதரன், மாத்தளை வடிவேலன்,
கலாநிதி ந. வேல்முருகு ஆகியோர்
கட்டுரை வாசிப்பார்கள்,
செல்வி. கமலினி நமசிவாயம்,
மாத்தளை கார்த்திகேசு, ஜே. சற்குருநாதன்
ஆகியோர் பதில் உரை ஆற்றுவார்கள்.
கலாசார கலை நிகழ்ச்சிகளும் நடைபெறும்.
முதலாவது இந்நிகழ்வில் கலந்து
தமிழ்மொழியையும், தமிழ் அன்னையையும்
கௌரவிப்போமா?

*என்றென்றும்*
*அன்புடன்*
*உங்கள்*
*இரா. அ. இராமன்*

# கண்டி இலக்கியக் களம்

## கவிஞர் மலைத்தம்பி நினைவுக் கருத்தரங்கு

மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் ஏற்பாட்டில் கவிஞர் மலைத்தம்பி நினைவுக் கருத்தரங்கு 08–06–97 அன்று கண்டி சிட்டிமிஷன் மண்டபத்தில் நடைபெற்றது. கலாநிதி துரை. மனோகரன் தலைமையில் நடைபெற்ற இக்கருத்தரங்கில் மக்கள் கலை இலக்கிய ஒன்றியத்தின் தலைவர் இரா. அ. இராமன் வரவேற்புரை நிகழ்த்தினார். கவிஞர் ஈழக்குமார் அஞ்சலி கவிதை வாசித்தார். பத்திரிகையாளர் க. ப. சிவம், பத்திரிகையாளர் ஐ. ஏ. றசாக், கணக்காய்வாளர் திரு. அ. அரியரட்ணம் ஆகியோர் நினைவுரையாற்றினார்கள்.

சிறிலங்கா சிகாமணி நாகலிங்கம் இரத்தினசபாபதி ஜே. பி., சேவாஜோதி லக்கிலேண்ட் எஸ். முத்தையா ஜே. பி. ஆகியோர் பிரதம விருந்தினர்களாக கலந்து கொண்டார்கள். மறைந்த மலைத்தம்பியின் நிழல் படத்தை சிறிலங்கா சிகாமணி நாகலிங்கம் இரத்தினசபாபதி அவர்கள் திரைநீக்கம் செய்தார். திரு அ. அரியரட்ணம், திருமதி நளாயினி சுப்பையா ஆகியோர் மாலை அணிவித்தார்கள்.
மலைத்தம்பியின் நிழல்படத்தை திரு. அ. அரியரட்ணம் அவர்கள் அன்னாரின் மைத்துனரிடம் கையளித்தார். நன்றியுரையுடன் கருத்தரங்கு நிறைவுற்றது.

## கிராமிய மணம் நூல் வெளியீட்டு விழா

கண்டி ஒறாபி பாஷா நலன்புரி சங்கத்தின் ஆதரவில் தமிழ் ஒளி பேராதனை ஷர்புன்னிஸா எழுதிய "கிராமிய மணம்" நூல் வெளியீட்டு விழா 31–05–97 அன்று ஒறாபி பாஷா கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இவ்விழாவில் பிரதம விருந்தினராக பாராளுமன்ற குழுக்களின் பிரதித் தலைவர் கௌரவ அல்ஹாஜ் ரவூப் ஹகீம் பா. உ. அவர்களும், கௌரவ விருந்தினராக கௌரவ அல்ஹாஜ் ஏ. எச். எம். அஸ்வர் பா. உ. அவர்களும் கலந்து கொண்டார்கள். கவிமணி எம். ஸி. எம். சுபைர் அவர்கள் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் வரவேற்புரையை அல்ஹாஜ் எஸ். எம். ஏ. ஹசன் நிகழ்த்தினார். நூல் அறிமுகத்தை கலாபூசணம் கவிஞர் ஏ. இக்பால் அவர்களும், நூல் ஆய்வை கலாகீர்த்தி பேராசிரியர் தில்லைநாதன் அவர்களும், பேராதனைப் பல்கலைக்கழக மெய்யியல்த்துறை விரிவுரையாளர் எம். என். எம். அனஸ், அசோக வித்தியாலய முதல்வர் சொல்லின் செல்வர் செ. நடராஜாவும், கவி வாழ்த்தை அல்ஹாஜ் கல்ஹின்னை எம். எச். எம். ஹலீம்தீன் அவர்களும், வாழ்த்துரையை ரூபராணி ஜோசப் அவர்களும் நிகழ்த்தினார்கள். பிரதம விருந்தினர்களின் சிறப்புரையும், நூலாசிரியரின் பதில் உரையையும் இடம்பெற்றது. முஸ்லீம் மாதர் சங்கத் தலைவி ஹாஜா இஸட், எச். நசீர் அவர்களின் நன்றியுரையுடன் விழா இனிதே நிறைவுற்றது. விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் பகல் உணவு வழங்கி சிறப்பித்தார்கள்.

## நன்றி, நன்றி, நன்றி

பேராதனைப் பல்கலைக்கழகப் பொருளியல்த்துறை பேராசிரியர் எம். சின்னத்தம்பி அவர்கள் கண்டி இலக்கியச் செய்தி மடல் வளர்ச்சிக்கு ரூபா 1000.00 அன்பளிப்பாக வழங்கி இந்த இலக்கியச் செய்தி மடல் வளர்ச்சியில் தாமும் பங்குக் கொண்டார். அன்னாரின் நல்ல மனதுக்கு எங்களின் அன்பான நன்றிகள் உரித்தாகுக.

எழுத்தாளரும் தொலைக்காட்சி நாடக எழுத்தாளர், தயாரிப்பாளரும், "பசியா வரம்" சிறுகதைத் தொகுதி ஆசிரியருமான நண்பர் கே. கோவிந்தராசு கண்டி இலக்கியச் செய்தி மடல் வளர்ச்சிக்கு மாத்தளையில் நடந்த பசியாவரம் நூல் அறிமுக விழாவில் கிடைத்த நிதியிலிருந்து ரூபா 1000.00 அன்பளிப்பாக வழங்கி இந்த இலக்கிய செய்தி மடல் வளர்ச்சியில் தாமும் பங்குக் கொண்டார் அன்னாரின் இந்த நல்ல மனதுக்கு எங்களின் நன்றி.

**கண்டி கலைவாணி புத்தக நிலையத்தின் வெளியீடாக**

கலாநிதி துரை. மனோகரனின்
இலங்கைத் தீவின் இலக்கிய ஓசைகள்
ஆய்வு நூல்
விரைவில் உங்கள் கரங்களில்

**மீண்டும் குன்றின் குரல் சஞ்சிகை**

பத்திரிகைத்துறையில் அனுபவமிக்க நண்பர் ***ஜோ. ஜேஸ்கொடியை*** பிரதம ஆசிரியராகக் கொண்டு வெளிவந்துள்ளது குன்றின் குரல் சஞ்சிகை.

*தொடர்புகளுக்கு*
*பிரதம ஆசிரியர்*
**குன்றின் குரல்**
*30. புஸ்பதான மாவத்தை*
*கண்டி*


*வளரட்டும் உங்கள் இலக்கியப்பணி*

**A/L, G.A.Q, B.A**
தமிழ் (வகுப்புக்களுக்கு)

ஸ்ரீகரன்

E.P.I
கண்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் அறிமுகம்

## முற்றத்திற்கு வாருங்கள்

இக்பால் அலியின் எண்ணத்திலே மலர்ந்த மலையகக் கவிதைகள் அடங்கிய முற்றத்துக்கு வாருங்கள் நூல் அழகான அட்டைப் படத்தை தாங்கி வெளிவந்துள்ளது. ஈழத்து இஸ்லாமிய இலக்கியத்திற்கு வளம் சேர்த்த பேராசிரியர். அல்லாமா உவைஸ் ஈழத்து முற்போக்கு இலக்கியத்திற்கு வளம் சேர்த்த அகஸ்தியர் ஆகியோர்களுக்கு இந்நூல் காணிக்கையாகப் படைப்பது மனங்கொளத்தக்கதாகும். கலாநிதி துரை மனோகரன் அவர்களின் முன்னுரையுடனும், தமிழகப் பேராசிரியர் அ. ஜமாலுதீன் அவர்களின் அணிந்துரையுடனும், பேராசிரியர் அம்பலவாணர் சிவராசா அவர்களின் வாழ்த்துரையுடனும் வெளிவந்துள்ளது இந்நூல். இக்பால் அலியின் கவிதைகளை இம்மூவரும் விதைந்து கூறியிருப்பது நோக்கத்தக்கது.

நூல்:- முற்றத்திற்கு வாருங்கள்
ஆசிரியர்:- இக்பால் அலி
வெளியீடு:- மக்கள் கலை இலக்கிய ஒன்றியம்
பக்கங்கள்:- 108
இலங்கை விலை ரூபா 60.00




தொடர்புகளுக்கு
இரா. அ. இராமன்
18/13 பூரணவத்தை – கண்டி



## கிராமிய மனம்
### (நாட்டார் இலக்கியம்)

பழம்பெரும் எழுத்தாளர் பேராதனை ஷர்புன்னிஸா அவர்கள் எழுதிய நாட்டார் மணம் வீசும் கிராமிய மணம் நூல் வெளிவந்துள்ளது. கண்டி நல்லாயன் மகளிர் கல்லூரி தமிழ்ப்பிரிவுப் பொறுப்பாளர் திருமதி லலிதா நடராஜா அவர்களின் முன்னுரையோடு மலர்ந்துள்ளது. இந்நூலின் அட்டைப்படம் கிராமிய மண் வாசனையோடு படைக்கப்பட்டுள்ளது. கட்டாயம் வாசிக்கவேண்டிய ஒரு நூல் கிராமிய மணம்.

நூல்:- கிராமிய மணம்
ஆசிரியர்:- பேராதனை ஷர்புன்னிஸா
பக்கங்கள்:- 60
விலை:- ரூபா 80.00



தொடர்புகளுக்கு
பேராதனை ஷர்புன்னிஸா
எல்லகல எஸ்டேட்
ஹீரஸ்ஸகல ரோட்
கண்டி

## எரிநெருப்பிலிருந்து................
### (கவிதைத் தொகுதி)

பிரபல கவிஞர் ஓட்டமாவடி அரபாத்தின் " எரிநெருப்பிலிருந்து......" என்ற கவிதைத் தொகுதி கிடைக்கப்பெற்றோம். கிழக்கிலங்கைப் பல்கலைக்கழக விரிவுரையாளர் செ. யோகராஜா எம். ஏ. அவர்களின் முன்னுரையோடு வெளிவந்துள்ளது இக்கவிதை நூல். சமூகத்தின் கொடுமைகளைக் கண்டு கொதித்தெழும் ஒருவராகவும், யுத்தத்தின் கோரத்தாண்டவத்தை கண்டு குமுறும் நெஞ்சம் கொண்டவராகவும், மானுடத்தை நேசிக்கும், இனங்காட்டப்படும் ஒருவராகவும் இவரது கவிதைகள் திகழுகின்றன.

நூல்:- எரிநெருப்பிலிருந்து.....
ஆசிரியர்:- ஓட்டமாவடி அரபாத்
பக்கங்கள்:- 40
விலை:- ரூபா 30.00



தொடர்புகளுக்கு
ஓட்டமாவடி அரபாத்
71, பஸீர் வீதி
மாவடிச்சேனை
வாழைச்சேனை

## பசியா வரம்

12 சிறுகதைகளோடு, மலையக மண் வாசனையோடு வெளிச்சத்திற்கு வந்துள்ளது பசியா வரம் சிறுகதைத் தொகுதி. நாடறிந்த நாடக எழுத்தாளர், தயாரிப்பாளர், சிறுகதை ஆசிரியர் கே. கோவிந்தராஜ் அவர்களின் கருவிலிருந்து பிறந்துள்ளது இந்நூல், இலங்கையின் பிரபல எழுத்தாளரும், சிறுகதையாசிரியரும், விமர்சகருமான தெளிவத்தை ஜோசப் அவர்களின் முன்னுரை இச்சிறு கதைகளைப் பற்றி மிகத் தெளிவாக எடுத்துக் காட்டப்படுகின்றது. மலையக மக்களின் சோகம், துன்பம், துயரம், ஏக்கப்பெருமூச்சு, ஏமாற்றம் இவை இலக்கியமாக்கப்பட்டுள்ளது. ஒவ்வொருவரும் கட்டாயம் வாசிக்க வேண்டிய நூல் பசியா வரம்.

நூல்:- பசியா வரம்
ஆசிரியர்:- கே. கோவிந்தராஜ்
வெளியீடு:- மலைநாட்டு எழுத்தாளர் மன்றம்
95, ரஜமல்வத்தை
கொழும்பு-15
பக்கங்கள்:- 110
விலை:- ரூபா 100.00

## மலையகச் சிறுகதைகள்

33 மலையகப் படைப்பாளிகளின் சிறுகதை தொகுப்பொன்றை வெளியிட்டு "துரைவி" பதிப்பக நிர்வாகி துரை விஸ்வநாதன் சாதனைப் படைத்துள்ளார். அழகான அட்டைப்படத்தோடு மலர்ந்துள்ள இந்நூல் பலரதும் பாராட்டைப் பெற்றுள்ளது. இத்தொகுதியைப் பற்றி ரூபவாஹினிக் கூட்டுத்தாபன தமிழ்ப் பிரிவுப் பணிப்பாளர் திரு. எஸ். வன்னியகுலம் கூறிய கருத்து மனங்கொளத்தக்கதாகும். **"மலையக சிறுகதைகள் வெறும் சடத்துவமானவையன்று ஒரே மூச்சில் படித்து விட்டு மூலையிலே தூக்கி எறியப்படும் இயல்பு கொண்டவையுமன்று. இவை ஒரு சமூகத்தின் கதைகள், கடந்த 175 ஆண்டு காலமாக அடக்கி ஒடுக்கப்பட்டு உரிமைகளும், சலுகைகளும் மறுக்கப்பட்ட ஒரு சமூகத்தின் வரலாற்றுப் பதிவுகள் துன்பமும், துயரமுமே வாழ்க்கையென வரையறுக்கப்பட்ட ஒரு வர்க்கத்தின் கதைகள் மலையக மக்களின் வாழ்க்கையை, வரலாற்றை இரத்தமும், சதையுமாக எம் கண் முன்னே விரிய வைக்கும் யதார்த்தங்கள்"**

நூல்:- மலையகச் சிறுகதைகள்
தொகுப்பாசிரியர்:- தெளிவத்தை ஜோசப்
வெளியீடு:- துரைவி வெளியீட்டகம்
பக்கங்கள்:- 322
இலங்கை விலை:- ரூபா 150.00

தொடர்புகளுக்கு துரை விஸ்வநாதன்
"துரைவி" வெளியீட்டகம்
85, இரத்தினஜோதி சரவணமுத்து மாவத்தை
கொழும்பு –13

## *வாழ்த்துகின்றோம்*


பேராசிரியர் சி. தில்லைநாதன் மக்கள் பேராசிரியரும் கூட. அன்னார் தினகரன் உதவி ஆசிரியராக இருந்த வேளையில் நன்கு பழக்கமானவர். மத்திய இலங்கையில் கல்வி, சமூக இலக்கிய மேம்பாட்டுக்கெல்லாம் அவர் ஆற்றிவரும் பணியும் பல்கலைக்கழகம் பல தசாப்பதங்களை எட்டிவிட்டமையால் எல்லா இன மக்களும் இணைந்த பாராட்டே அவருக்கு நாம் புரியும் நன்றி.
–ஐ. ஏ. ரசாக்

கண்டி இலக்கியச் செய்தி மடல் தொடர்ந்து வெளிவர வாழ்த்துகின்றோம்.

அஸ்ஸலபிய்யா பேக்ஹவுஸ்

அஸ்ஸலபிய்யா புத்தக நிலையம்
கண்டி வீதி – பற்ஹாதெனிய
வே/உ_

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# காற்று வெளியினிலே ...............



–கலாநிதி துரை. மனோகரன்–

## மணிவிழா நாயகன்

கல்வி, கலை – இலக்கியத் துறைகளைச் சார்ந்தோர், பேராதனைப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர் சி. தில்லைநாதன் அவர்களை அறியாதிருக்க இயலாது. எல்லோரிடத்தும் சகஜமாக பழகும் சுபாவத்தினாலும், பிறருக்கு உதவும் மனப்பாங்கினாலும், கல்வி, கலை – இலக்கியத் துறைகளிற் காட்டும் ஈடுபாட்டினாலும் பலரையும் கவர்ந்த ஒருவராக அவர் விளங்குகிறார். அதே வேளை, இவ்வாண்டின் மணிவிழா நாயகராகவும் பேராசிரியர் திகழ்கிறார். யாழ்ப்பாணத்திற் சாதாரண குடும்பத்திற் பிறந்து, தமது உழைப்பினாலும், திறமையினாலும் பேராசிரியர் பதவி வரை உயர்ந்தவர். அவர் கவிதை, சிறுகதை, நாடக முதலான ஆக்க இலக்கியத் துறைகளிலும் விமர்சனத் துறையிலும் ஈடுபாடு காட்டி வந்துள்ளார். பழந்தமிழ் இலக்கியங்களிலும், நவீன இலக்கியங்களிலும் பரிச்சயமும் புலமையும் கொண்ட தில்லைநாதன் அவர்கள் சில ஆண்டுகள் ஏரிக்கரை பத்திரிகை நிறுவனத்திலும் ஆசிரிய பீடத்திற் பணியாற்றியுள்ளார். அவ்வாறு பத்திரிகைத் துறையில் அவர் பெற்ற பயிற்சியும் அனுபவமும் எதனையும் செட்டாகவும், நுண்மையாகவும், எளிமையாகவும், சுவையாகவும் எழுத்து வடிவிலே தரும் பாங்கினை அவருக்கு அளித்தன எனலாம். 10 வசனங்களிற் கூறியதை 40 பக்கங்களில் வழ வழா என்று ஆரவாரமாக அர்த்தமில்லாமல் எழுதிச் செல்லும் போக்கு அவரிடத்திற் காணப்படுவதில்லை. சுருங்கச் சொல்லி விளங்க வைத்தல் தெளிவுறவே மொழிந்திடுதல் என்பவை அவரது உரை நடையின் முக்கிய பண்புகள் எனலாம். அவரது நூல்களாக வள்ளுவன் முதல் பாரதிதாசன் வரை இலக்கியமும் சமுதாயமும் ஆகியவை இதுவரை வெளிவந்துள்ளன. இலங்கை தமிழ் இலக்கியம் தொடர்பான அவரது கட்டுரைகளின் தொகுப்பு நூல் ஒன்று விரைவில் வெளிவரவுள்ளது. பல துறைகள் குறித்தும் ஏராளமான கட்டுரைகளை அவர் எழுதி உள்ளார். பேராசிரியர்கள் க. கணபதிப்பிள்ளை, வி. செல்வநாயகம், சு. வித்தியானந்தன், ஆ. சதாசிவம் முதலானோரின் மாணவரான தில்லைநாதன் அவர்கள் சிறந்த பல்கலைக்கழக ஆசிரியர்களுள் ஒருவராவார். எளிமையும் சுவையும் கலந்த அவரது விரிவுரைகள் சுவாரசியமானவையாக விளங்கும். நான் பல்கலைக்கழக மாணவனாக இருந்த போது அவரது விரிவுரைகளை மிகவும் விரும்புவது உண்டு. என்னிடத்தில் விமர்சனத் தாக்கத்தை அவரது விரிவுரைகள் ஏற்படுத்தி வந்துள்ளன. தற்போது சாகித்திய மண்டலத்தின் தமிழ் கலை இலக்கிய குழுவின் தலைவராகவும் விளங்கும் பேராசிரியரது கட்டுரைகள் பலவும் எதிர்காலத்தில் நூலுருவம் பெற வேண்டும். அப்போதுதான் அவரது பங்களிப்புகள் பற்றிய மதிப்பீடு மேற்கொள்வதற்குப் போதிய வாய்ப்பு ஏற்படும். மணிவிழா நாயகரை மனதார போற்றி வாழ்த்துவதிலே நாம் பெருமையும் மகிழ்ச்சியும் அடைகிறோம்.

## "இரவின் மடியில்" படும் பாடு

இலங்கை வானொலி பற்றி எனக்கு எப்போதுமே நல்ல அபிப்பிராயமே உண்டு. திருஷ்டி பட்டது போல சிலர் இருந்தாலும், பெரும்பாலும் தரமான அறிவிப்பாளர்களையும் தயாரிப்பாளர்களையும் கொண்ட நிலையம் அது. தேசிய சேவையிலும், வர்த்தக சேவையிலும் அது வழங்கும் நிகழ்ச்சிகளில் பெரும்பாலானவை தரமானவை. ஆயினும், வர்த்தக சேவையில் நாள்தோறும் இரவில் இறுதி நிகழ்ச்சியாக ஒலிபரப்பப்படும் "இரவின் மடியில்" என்ற நிகழ்ச்சியை செவிமடுக்கும் போது, எமது வர்த்தக சேவைக்கு என்ன நேர்ந்து விட்டது என்ற விரக்தியே எனக்கு ஏற்படுவதுண்டு. வர்த்தக சேவையில் இறுதி நிகழ்ச்சியாக அது, மங்களகரமாகவே முடிய வேண்டும். பலரும் தூங்குவதற்கு, அல்லது தூங்க முயற்சி செய்வதற்கு உரிய நேரம் அது. அத்தகைய வேளையில், ஒரு சோக நிகழ்ச்சி போல ஒலிபரப்பப்படும் இந்நிகழ்ச்சியில், சில வேளைகளில் மட்டும் அறிவிப்பாளர்கள், நிகழ்ச்சி தயாரிப்பாளர்கள் மறதியினால் சில மங்களகரமான, மகிழ்ச்சிகரமான பாடல்களை இடம்பெற செய்து விடுகின்றார்கள். நிகழ்ச்சி மனங்களை அரிக்கின்றதென்றால், சில வேளைகளில் சில அறிவிப்பாளர்கள், தாம் ஒலிபரப்பும் பாடல்களுக்குக் கொடுக்கும் அறுவை வியாக்கியானங்கள், நமது செவிகளை அறுக்கின்றது. மனதுக்கு நிம்மதி தருவதாகவும், நம்பிக்கை உணர்வுகளை ஏற்படுத்துவதாகவும் நல்ல சிந்தனைகளுக்குக் களம் அமைப்பதாகவும் மகிழ்ச்சிகரமாகவும் அமையவேண்டிய அந்த நிகழ்ச்சி, மக்களுக்கு இருக்கிற நிம்மதியையும் இல்லாமற் செய்துவிடும் வகையில் அமைந்து விடுகிறது. காதல் தோல்வி, நம்பிக்கை வரட்சி, வாழ்வில் ஏமாற்றம், சமூகத்தின் மீது கண்டனம் முதலானவற்றின் அடிப்படையில் அமைந்த பாடல்களையே சம்பந்தப்பட்டவர்கள் அரும்பாடுபட்டு "தெரிவு செய்து" ஒலிபரப்பி மகிழ்கிறார்கள். நாள் முழுவதும் தரமான நிகழ்ச்சிகளை ஒலிபரப்பிவிட்டு, திருஷ்டி கழிப்பது போல "இரவின் மடியில்" நிகழ்ச்சி ஒலிபரப்பப்படுகிறது. "நாளைய பொழுது மிக நல்ல பொழுது ஆகுமென்று நம்பிக்கை கொள்வாயடா" என்பது போன்ற பாடல்களைக் காலையில் "சிந்தனை முத்துக்கள்" நிகழ்ச்சியில் வானொலி நிலையத்தினர் கோட்டைவிட்டு விடுகிறார்கள். நமது வானொலி நிலையத்தினருக்குச் சரியாக இரவு 9.30க்கு எப்படித்தான் சோகம் வந்து கவ்விக் கொள்கிறதோ தெரியவில்லை.

### கண்ணதாசனைப் படிக்காமல்......

கண்ணதாசனைப் பற்றி மேடைகளிற் பேசுவோர், தொலைக்காட்சி நிகழ்ச்சிகளுக்குப் பேட்டியளிப்போரிற் பெரும்பாலோர், அவரைப் பற்றிச் சரிவரத் தெரிந்து கொள்ளாமலே தங்கள் "திறமையை" வெளிப்படுத்தி வருவதை, இப்போதெல்லாம் அடிக்கடி பார்க்க முடிகிறது. அண்மையில் இலங்கைத் தொலைக்காட்சி நிகழ்ச்சியொன்றுக்குப் பேட்டியளித்த கண்ணதாசனின் மகளான விசாலி கண்ணதாசனும், தந்தையின் நூல்களைப் படிப்பதில்லைப் போல் தோன்றுகிறது. பேட்டியாளர் கேட்ட கேள்வியொன்றுக்குப் பதிலளித்த விசாலி கண்ணதாசன் கண்ணன் மீது கொண்ட பக்தியின் காரணமாகவே, அவர் தமக்குக் "கண்ணதாசன்" என்ற புனைப்பெயரைச் சூட்டினார் என்று கூறியுள்ளார். அவரோடு பேட்டியிற் கலந்து கொண்ட பாடகி எல். ஆர். ஈஸ்வரியும் அவரோடு சேர்ந்து "ஆமா" போட்டார். பேட்டியாளரும் கண்ணதாசனைப் பற்றிச் சரிவர வாசித்திருக்கவில்லை. கண்ணதாசன் கண்ணனைப் பற்றி நிறையப் பாடல்கள் எழுதியுள்ளார் என்பது உண்மையே. ஆயினும், அவர் தமக்குக் "கண்ணதாசன்" என்ற புனைப்பெயரை இட்டமைக்கு அதுவே காரணமல்ல. இப்போது நான் கண்ணதாசனையே, அவரது "வனவாசம்" என்ற சுயசரிதை மூலமாகப் பேசவைக்கிறேன். அந்நூலில் அவர் தம்மை "அவன்" எனப் படர்க்கையிலே சுட்டிச் செல்கிறார். பத்திரிகை அதிபர் ஒருவரை அவர் சந்தித்த நிகழ்ச்சியை, நூலின் ஓரிடத்தில் அவர் அசைபோடுகிறார்:

"என்ன பெயரில் இதுவரையில் கதை, கட்டுரைகள் எழுதியிருக்கிறீர்கள்?" என்று அவர் கேட்டார்.

சொந்தப் பெயரைச் சொல்ல வந்த அவன் கொஞ்சம் தயங்கினான். புனைபெயருக்குச் செல்வாக்கு இருந்த காலம் அது! அதிலும் தாசன் என்று வரும் புனைபெயருக்கு மரியாதையே தனி. பாரதிதாசன், கம்பதாசன், சக்திதாசன், காளிதாசன் என்ற பெயர்கள் நாலுபேருக்குத் தெரிந்த பெயர்களாக விளங்கின. அவன், "என்னதாசன் என்று சொல்லலாம் என்றுதான் யோசித்தான். சில வினாடி யோசனைக்குப்பின் தான் யோசித்துச் சொல்வதை அவர் அறியாமல் மறைக்க, எங்கேயோநினைவில் இருந்தவன் போல், "என்ன கேட்கிறீர்கள்?" என்று கேட்டான். மீண்டும் அவர் பழைய கேள்வியையே திருப்பினார். அப்போதே அவன் முடிவு கட்டியபடி பளிச்சென்று "கண்ணதாசன்" என்பது, என் புனைபெயர் என்றான். அவரும் அது ஏதோ அறிமுகமான பெயர் போல், "பார்த்திருக்கிறேன் பத்திரிகைகளில்" என்றார்.

இதற்குப் பெயர்தான் சந்தர்ப்பம் என்பது! உண்மையில் அவர் அந்தப் பெயரை எந்தப் பத்திரிகையிலும் பார்த்திருக்க முடியாது. அந்தப் பெயரே இரண்டு நிமிடங்களுக்கு முன்னால் தான் பிறந்தது! (பக். 52)

உண்மை இவ்வாறு இருக்க, கண்ணதாசனின் நூல்களைப் படிக்காமலே அவர் பற்றி மேடைகளில் முழங்குவதும், பேட்டிகளில் கருத்துக் கூறுவதும் நியாயம் தானோ?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமாவும் சிந்தனையும்

–ந. பார்த்தீபன் பி. ஏ. சிறப்பு–

## மோகமுள்

அம்மா வந்தாள், உயிர்த்தேன், மரப்பசு போன்ற சிறந்த நாவல்களைத் தந்த தி. ஜானகிராமனின் அளவில் பெரியதும் தரத்தில் சிறந்ததுமான நாவல் தான் மோகமுள். எதிலும் மோகங் கொண்டால் உடலில் தைத்த முள் போல் உறுத்திக் கொண்டிருக்கும். இங்கும் நாயகி மேல் நாயகன் கொண்ட மோகம் அவனைச் சதா அரித்துக் கொண்டிருக்க அவனின் தவிப்புகளும், ஆசைகளும் மிகையில்லாது எடுத்துக் காட்டியிருந்தார் ஜானகிராமன். இசையார்வமும், ஆற்றலும் உள்ள சிறுவன் முறையாகப் பயின்று முன்னேறுகிறான். அவனுடைய திறமைக்கு மிகச் சிறந்த சங்கீத வித்வானாக வரக்கூடிய வாய்ப்புக்கள் இருக்கிறது. ஆனால் மோகம், சங்கீதத்திலில்லாது தன்னை விட அதிக வயது வித்தியாசத்திலுள்ள ஒரு பெண்ணில் இருந்ததால் எல்லோரும் எதிர்பார்த்த நிலைக்கு அவனால் போக–வளர முடியவில்லை. நாயகியை நாயகன் அடைந்தானா, அவள் சம்மதிப்பாளா போன்ற கேள்விகள் வாசகர் மனதில் உருவாகிறது. கர்நாடக சங்கீத விளக்கங்களும், பாடல்களும் என கதை நீண்டதாக இருந்த போதும் வாசகர்களை இழுத்துச் செல்லும் கலையில் ஜானகிராமன் கைதேர்ந்தவர் என்பது அவரது படைப்புக்களால் படித்தோர் அறிவர்.

இந்நிலையில் மோகமுள் திரைப்படமும் இந்த வல்லமையைப் பெற்றுள்ளது. பக்கத்து வீட்டு அக்கா, பாசமும்–அரவணைப்பும் மிக்கவளாய் அவனுடன் பழகுகிறாள். அவளது அழகும்–அன்பும் சிறுவயதிலே அவன் மனதில் அழிக்கமுடியாத கோலத்தை வரைந்து விடுகிறது. அவன் ஆழ்மனதில் தெய்வம் போல் போற்றப்பட வேண்டியவள் என்ற நினைப்பு, காலப் போக்கில் மாற்றமுறுகிறது. ஒருவனின் வைப்பாட்டிக்குப் பிறந்தவள் என்பதனாலும், முன்னின்று அவளது திருமண முயற்சிகளில் யாரும் ஈடுபடாததாலும் அந்த முதிர்கன்னியில் பாசம் பிறக்க, தானே அவளுக்கு வாழ்வு கொடுக்க வேண்டுமென நாயகன் நினைக்கிறான்.

நாயகியின் வயதோ 10லும் அதிகம். குடும்ப நிலை தரித்திரம் அவனோ சங்கீதத்தின் சிகரங்களைத் தொட வேண்டியவன். இந்நிலையில் இதை ஒரு கேலிக் கூத்தாக அவள் நினைத்து அவனைப் புறக்கணிக்கிறாள் நாயகி. இப் புறக்கணிப்பு அவனை அவள்மீது மோகங்கொள்ள வைக்கிறது. இந்த மோகம் தீர்ந்ததா? நாயகி ஒருமுறை தன்னை இழப்பதற்குக் காரணம் என்ன? போன்றவற்றைத் தேடும் முயற்சியே ரசிகர்களுக்குத் தரப்பட்ட மோகமுள் திரைப்படம்.

நாயகன் சங்கீதத்தில் உச்சநிலையை அடைய முடியாது தவிப்பதும், நாயகி திருமண பந்தம் கிடைக்காது ஏங்குவதும், அவனது சங்கீத முன்னேற்றத்திற்காக அவள் தன்னை அர்ப்பணிப்பதும், அவள் தன்னில் மூட்டி விட்ட காதல் நெருப்பில் உருகி சந்தர்ப்பவசத்தால் அவன் வேறொரு பெண்ணிடம் தன்னை இழப்பதும், அந்த இழப்பினில் வெறுப்படைந்து நாயகியை கோபிப்பதும்.......என சிக்மன் புரோய்டின் ஆழ்மனத் தொழிற்பாடும், நிறைவேறாத ஆசைகளின் செயற்பாடும் என படம் மேல்மட்ட ரசனையுள்ளவர்களுக்கு மட்டுமே பொருத்தமாயுள்ளது.

கலைத்துவமான படங்கள் தோல்வியைத் தழுவுகின்றன. வசூலில் நட்டத்தை அடைகின்றன. ஆனால் ஒரு சத்தியஜித்ரேயின் படத்தைப் பார்ப்பது போன்ற உணர்வை மோகமுள் கொடுப்பதையும் நல்ல ரசிகர்கள் உணர்ந்து கொள்ளலாம். பாத்திரத் தெரிவு, காட்சி அமைப்புகள், இசை, கர்நாடக இசையுடன் கூடிய பாடல்கள், அளவான பொருத்தமான வசனங்கள் என ஒவ்வொன்றும் கச்சிதமாகப் பொருந்தி உள்ளன. இன்று வெளியிடப்படும் 90% மான படங்களின் வரிசையில் இப்படம் அமையாதது மட்டமான ரசிகர்களுக்கு கவலையே. ஆயினும் வெறும் லாப நோக்கில் மட்டும் பல படங்கள் அமையாது கலைத்துவம் மிக்க படங்களும் சில வரவேண்டும் என ஆதங்கப்படும் தரமான ரசிகர்கள் இதுவரை பார்க்காது விட்டால் எடுத்துப் பாருங்கள் என்று துணிந்து கூறக்கூடிய திரைப்படமே மோகமுள். இரண்டாந்தர இயக்குனர் கையில் இது விரசமாகப் போயிருக்கக் கூடிய ஆபத்துண்டு. ஆனால் ஞான ராஜசேகரன் தன் தொழிற் திறமையைக் காட்டி நளினமாகப் படமாக்கியுள்ளார்.

# ஈழத்தில் பயில் நிலையிலுள்ள தமிழ் நாடக அரங்கியற் கலை

**(அறிமுகமும், பேணுதல் வளர்த்தல் சம்பந்தமாக சில ஆலோசனைகளும்)**

**கலாநிதி சி. மௌனகுரு**
**பீடாதிபதி கிழக்கிலங்கைப் பல்கலைக்கழகம்**

ஈழத்திலே பயில் நிலையிலிருந்து கொண்டிருக்கின்ற தமிழ் நாடக–அரங்கியற் கலையைச் சுருக்கமாகவும், பொதுப்படையாகவும் அறிமுகம் செய்தல் இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும். அறிமுகம் செய்வதுடன் அந்நாடகங்களை எவ்வாறு பேணலாம்? வளர்க்கலாம் என்பனவற்றையிட்டுச் சில ஆலோசனைகளும் இக்கட்டுரையிலே தரப்படுகின்றன.

ஈழத்தில் பயில் நிலையிலுள்ள தமிழ் நாடகங்களை இரண்டு பிரிவுகளுக்குள் அடக்கலாம்.

1. பாரம்பரிய நாடகங்கள் 2. நவீன நாடகங்கள்.

பாரம்பரிய நாடகங்கள் என்பன ஆங்கிலேயர் ஆட்சிக்கு முன்னர் ஈழத் தமிழர் மத்தியில் நிகழ்த்தப்பட்டதும், இன்றுவரை தொடர்ச்சியாக நடத்தப்படுவதுமான ஆடி, பாடி, நடிக்கும் நாடகங்களாகும். இதிலே பல பிரிவுகளுள்ளன.

நவீன நாடகங்களாவன ஆங்கிலேயர் வருகையின் பின் எழுந்த முப்பக்கம் அடைக்கப்பட்ட மேடையில் நடத்தப்படும் வசனம் பேசி நடிக்கும் நாடகங்களும் அவற்றின் இன்றைய புதிய பிரிவுகளுமாகும்.

பாரம்பரிய நாடகங்கள்

(1) பாரம்பரிய நாடகங்கள் என அழைக்கப்படுபனவற்றை மூன்றாக வகுக்கலாம்.

(2) சமயக் காரணம் சார்ந்த நாடகங்களாக நிகழ்த்தப்படுகின்றவை. இவற்றை நாடகம் என ஏற்பதில்லையாயினும் இதில் வரும் நாடக அம்சங்கள் கணக்கில் எடுக்கத்தக்கவை.

(உதாரணமாக எல்லாப் பிரதேசங்களிலும் முருகன், சிவன், விஷ்ணு கோயில்களில் நடைபெறுகின்ற சூரன்போர், இயம சங்காரம், கஞ்சன் போர் ஆகியன. இங்கு சூரனை, இயமனை முறையே முருகன், சிவன், விஷ்ணு ஆகியோர் தண்டித்தமை நாடகப் பாணியில் விளக்கப்படுகிறது. கோயில் வெளி வீதியே மேடையாகவும் பக்தர்களே பார்வையாளராகவும் அமைய மரத்தாற் செய்யப்பட்ட சூரர்கள் சிலைகளும், புராதன கால நாரதர், வீரபாகுத் தேவர், படைக்கலங்களாக வேடமிட்ட மனிதரும் இணைந்து இதனை நடத்துவர். பிரதேச வழக்கிற்கு இயைய, இவை பகலில் அல்லது இரவில் நடைபெறும். கிழக்கு மாகாணத்திலுள்ள திரௌபதி கோயில்களில் நடைபெறும் தீப்பள்ளயம் இன்னொரு உதாரணமாகும். பஞ்சபாண்டவர்களாக ஐவர் மகாபாரதக் கதையை வெட்டவெளியில் மக்களுக்குப் பக்திபூர்வமாக நிகழ்த்திக் காட்டுவர். பஞ்சபாண்டவர்களாக உருக்கொண்டு ஆடுபவர்களை மக்கள் தெய்வங்களாகப் பூஜித்து இந்நிகழ்ச்சியிலீடுபடுவர். இவற்றை நாடகமாக நோக்கமல்ல சமயக் காரணமாகவே மக்கள் நினைப்பர்.

கிறிஸ்தவர் மத்தியில் வழக்கிலுள்ள பசான் என்றழைக்கப்படும் நாடகம் மற்றுமோர் உதாரணமாகும். மரத்தாலான யேசுநாதர், கன்னிமரியாள், மகதலேனா போன்றோரின் சிலைகளைச் செய்து மக்களிற் சிலர் எருசலேம் நகர மக்களாகவும், றோமாபுரி வீரர்களாகவும் வேடமிட்டு கிறிஸ்துநாதர் சிலுவையில் அறையப்படுவதனை நடிப்பர். மக்கள் பார்வையாளர்களாகப் பக்தி சிரத்தையுடன் இதில் ஈடுபடுவர். யாழ்ப்பாணம், மன்னார், மட்டக்களப்புப் பகுதிகளில் வாழ் தமிழ்க் கிறிஸ்தவரிடையே இது இன்றும் வழக்கிலுண்டு.

(1) சமயக் காரணமாக நடத்தப்படும் மேற்சொன்ன நிகழ்வுகளுக்கும், நாடகமாக முகிழ்த்த வடமோடி, தென்மோடி கூத்துக்களுக்கும் இடைப்பட்ட, ஆனால் முழு நாடக வடிவம் பெறாத கூத்துக்கள் மகிடிக்கூத்து, வசந்தன் கூத்து, பறை மேளக் கூத்து குடமூதற் கூத்து, வீரபத்திரன் ஆட்டம் என்பன இவற்றுள் அடங்கும்.

(தொடரும்................)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மல்லிகையின் மீள் வருகையும் முற்போக்கு இலக்கியத்திற்கு அதன் தேவையும்

கிட்டத்தட்ட ஒன்றரை வருடங்களுக்கு பிறகு கொழும்பில் இருந்து மல்லிகை மலர்ந்துள்ளது. முற்போக்கு வாசகர்களை ஏங்க வைத்த இதன் வருகை மகிழ்ச்சித் தரக்கூடியதாகும்.

கணனி அச்சியமைப்பில், ஈழத்து நாடகக்குழுவினர்களின் வர்ண அட்டைப்படத்தோடு சிரிக்கின்றது மல்லிகை. தோழர் டொமினிக் ஜீவா எழுதும் எழுதப்படாத கவிதைக்கு வரையப்படாத சித்திரம் சுயசரிதை தொடர் தொடர்கின்றது. ராஜசிறிகாந்தன், திக்குவலை கமால் தில்லை சிவன் ஆகியோர்களின் சிறுகதைகளும் ப. ஆப்டீன், கலாநிதி க. அருணாசலம், கே. எஸ். சிவகுமாரன் மா. பாலசிங்கம் ஆகியோர்களின் கட்டுரைகளும், மேமன்கவி, பாலரஞ்சனிசர்மா ஆகியோர்களின் கவிதைகளும் இவ்விதழில் இடம் பெற்றுள்ளது. அத்தோடு, மறைந்த மலையகக் கவிஞர் மலைத்தம்பிக்கு அஞ்சலி செலுத்தப்பட்டுள்ளது.

முற்போக்கு இலக்கியம் மணக்கும் மல்லிகையை தோழமையுடன் இருகரம் நீட்டி மலையகம் வரவேற்கின்றது. இதன் வளர்ச்சியில் கண்டி இலக்கியச் செய்தி மடல் தோள் கொடுக்கும் என்பதையும் கூறி வைக்க விரும்புகின்றோம்.

தொடர்புகளுக்கு
ஆசிரியர்:– மல்லிகை
201-1/1, கதிரேசன் வீதி
கொழும்பு-13
விலை:– ரூபா 15.00

### புதிய நிர்வாகக் குழுவினர்

அட்டன்–டிக்கோயா தமிழ்ச் சங்கத்தின் நடப்பு வருட நிர்வாகக் குழுவினர்களாக கீழ் கண்டோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர்:– திரு. அ. ஆ. இராஜேந்திரன்
துணைத்தலைவர்:– என். நல்லுசாமி
செயலாளர்:– திரு பாலசங்குப்பிள்ளை
துணைச்செயலாளர்:– திரு. சு. கேசவமூர்த்தி
பொருளாளர்:– திரு. வி. முகுந்தா
துணைப்பொருளாளர்:– திரு. மா. புவனேந்திரன்
அமைப்பாளர்:– திரு. இரா. சிவராமன்
கலை, கலாசாரத் தொடர்பு:– திரு. தி. இரா. கோபாலன்
பத்திரிகைத் தொடர்பு:– திரு. என். துரைராஜ்

தொடர்புகளுக்கு
செயலாளர்
திரு. பாலசங்குப்பிள்ளை
அட்டன்–டிக்கோயா தமிழ்ச்சங்கம்
44/3, டன்பார் வீதி
அட்டன்

### நல்ல மனங்கள் அனுப்பிய சந்தா விபரம்

| | |
|---|---|
| செல்வி சசி லீலா | – 250.00 |
| செல்வி சசிவதனி (கலைவாணி புத்தக நிலையம்–கண்டி) | – 250.00 |
| சைவநன்மணி ஏ. எம். துரைசாமி கொழும்பு | – 120.00 |
| கவிஞர் மடவளை கலீல் | – 150.00 |
| கவிஞர் க. ப. லிங்கதாஸ் (அட்டன்) | – 150.00 |

### விரைவில் எதிர்பாருங்கள்

பேராசிரியர் க. அருணாசலம் அவர்களின்
இலங்கையில் தமிழியல் ஆய்வு முயற்சிகள்
460 பக்கங்கள் மலர உள்ளது.
தொடர்புகளுக்கு
பேராசிரியர் க. அருணாசலம்
தமிழ்த்துறை, பேராதனைப் பல்கலைக்கழகம்
பேராதனை

## 1996 இல் ஈழத்துத்தமிழ் இலக்கிய சூழலில் வெளியான புத்தகங்கள்


1. சிறுகதை
   1. கடலும் கரையும் – மு. பொன்னம்பலம்
   2. தசமங்களம் – என். கே. ரகுநாதன்
   3. மீறல்கள் – மு. பஷீர்
   4. புதிய வார்ப்புக்கள் – பத்மா சோமகாந்தன்
   5. விடை பிழைத்த கணக்கு – திக்குவலை கமால் – விடுதலை
   6. பசியா வரம் – கே. கோவிந்தராஜ்
   7. வாழ்தல் என்பது – கவியுகன்
   8. வானொலிப் பெட்டியும் மற்றும் சிறுகதைகளும் – எம். எல். ராஜ்குமார்
   9. யாரோ எவரோ எம்மை ஆள – பி. எம். புன்னியாமீன்
   10. தலைவிதியை பறிகொடுத்தோம் – பெனடிக்ற் பாலன்
   11. புதிய பயணம் – இரத்தினவேலோன்
   12. காலக்கீறல்கள் – தேவகடாட்சம்
   13. ஒரு இதயம் அழுகிறது – உயன்வத்தை றம்ஜான்
2. நாவல்
   1. மூடுபனி – சந்தனம் சத்தியநாதன்
   2. மண்ணிற் சமைந்த மனிதர்கள் – வ. ச. இராஜரத்தினம்
   3. வடக்கும் தெற்கும் – சத்தியங்கள் சமாதியாவதில்லை – இன்றல்ல நாளை கல்யாணம் – சோ. இராமேஸ்வரன்
   4. அவனுக்குத் தெரியும் – திமிலை மகாலிங்கம்
3. கவிதை
   1. பனியில் மொழி எழுதி – சோலைக்கிளி
   2. அகளங்கன் கவிதைகள் – அகளங்கன்
   3. சங்கமம் – எம். எஸ். எம். அமீன்
   4. எரி நெருப்பிலிருந்து – ஓட்டமாவடி அறபாத்
   5. புனித பூமியிலே – ஜின்னா ஜெரிப்புத்தீன்
   6. முற்றத்திற்கு வாருங்கள் – இக்பால் அலி
   7. மக்கத்து மலரே – சாஜஹான்
   8. கஹ்கார் கவிதைகள் – அப்துல் கஹ்கார்
   9. தரப்பட்டுள்ள அவகாசம் – மு. இ. அ. ஜபார்
4. நாடகம்
   1. நந்தி உடையார் – அருணா செல்லத்துரை
   2. ஈரமுள்ள காவோலைகள் – செல்வவேல்
   3. சூர்ப்பனகை – இடது கை வாங்கிய இராவணத் தனுசு – பாலசுகுமார்
   4. யாழூர் தாகம் – மொஹிதீன் ராஜா
   5. நீர்பூத்த நெருப்பு – க. செல்லத்தம்பி
   6. நாடகம் எழுதுவது எப்படி? – ந. சுந்தரம்பிள்ளை
5. மொழிபெயர்ப்பு
   1. காற்றின் மௌனம் (கவிதைத் தொகுதி) – பன்னாமத்துக் கவிராயர்
   2. தாய்லாந்து நாட்டார் கதைகள் – த. கனகரத்தினம்
   3. தாய் – த. தர்மகுலசிங்கம்
6. தமிழ்மொழி இலக்கியம் சார்ந்த நூல்கள்
   1. எழுதாத வரலாறு – பெ. முத்துலிங்கம்
   2. திறனாய்வு பார்வைகள் – கே. எஸ். சிவகுமாரன்
   3. இஸ்லாமிய இலக்கிய நோக்கு – அ. ச. அப்துல் சமது
   4. நடிகை மணி வி. வி. வைரமுத்துவின் – வாழ்வும் அரங்கமும் – கலாநிதி காரை சுந்தரம்பிள்ளை
   5. முஸ்லிம்கள் வளர்த்த அழகிய கலைகள் – சி. எம். ஏ. அமீன்
   6. நவநாத சித்தர் – பரமநாதன்
   7. கிராமிய மணம் – ஷர்புன்னிஸா
   8. தம்பி தங்கைக்கு – சி. சிவஞான சுந்தரம்
   9. இலக்கிய ஊற்று – ஏ. இக்பால்
   10. நல்வாழ்விற்குரிய நடைமுறை சிந்தனைகள் – உ. சோமசுந்தரம்
   11. தமிழ் சிங்கள இலக்கிய உறவு – புலவர் த. கனகரத்தினம்
   12. மகிழ்ச்சியின் இரகசியம் – யோகபாலா
   13. உலக நாடக அரங்கு – பாலசுகுமார்
7. சிறுவர் இலக்கியம்
   1. சிறுவர்களுக்கான பிறநாட்டுக் கதைகள் – மு. சி. சீனித்தம்பி
   2. செயா உலகத்துக் கதைகள் – வ. செல்லையா
   3. பிள்ளைப் பூக்கள் – ந. தர்மலிங்கம்
   4. ஏணியும் தோணியும் – ரூபராணி ஜோசப்
   5. காகமும் தம்பியும் – ச. அருளானந்தன்
   6. மாயக்கிழவி – ஒ. கே. குணநாதன்
   7. மந்திரமா தந்திரமா – செ. யோகநாதன்

நன்றி
எம். பௌசர்
சரிநிகர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம். சி. சித்திலெவ்வை

திரு. எம். என். எம். அனஸ்
பேராதனைப்பல்கலைக்கழகம்



சித்திலெவ்வையின் எழுத்துத்துறைப் பங்களிப்போடுதான் ஒரு நூற்றாண்டுகால முஸ்லிம்களின் ஆய்வுத்துறை வரலாறு ஆரம்பமாகிறது. கல்வி, பொருளாதாரம், கலாசாரம், அரசியல் ஆகிய துறைகளில் முஸ்லிம்களின் மேம்பாட்டிற்காக அவர் ஆற்றிய அரும்பணிகளில் அவரது எழுத்துப் பணிகளுக்குச் சிறப்பான பங்குண்டு.

ஏ. எம். ஏ. அஸீஸின் பின்வரும் கருத்தை இங்கு நினைவு கூறுவது முக்கியமானதாகும்.

" சித்திலெவ்வை அவர்கள் எதனையும் துருவி ஆராயும் இயல்புடையவராய் விளங்குகிறார்.... சமகால அரசியல் விவகாரங்களை ஐயந்திரிபற அறிந்திருந்தமையால் தமது சமுதாயத்தை பீடித்த பீடைகள் யாவை என்பதை வெகுநுட்பமாக நாடிப்பிடித்துச் சொல்லும் திறமை பெற்றிருந்தார். (ஸேர்) செய்யத் இஹமத்கான் அவர்களின் தலைமையிலே இந்தியாவிலே வெற்றி பெற்று வந்த அலிகார் இயக்கத்தை அவர் மிகுந்த அக்கறையுடன் கவனித்து வந்தார்". (1972).

எம். சி. சித்திலெவ்வை அக்காலத்தில் முன் வைத்த கருத்துக்களிலும் ஆய்வுகளிலும் சேர். செய்யித் அகமத்கானின் சிந்தனைச் செல்வாக்கும் கருத்துக்களும் விரைவிக் கிடந்தன. சிறுபான்மை இனத்துக்குரிய தனித்துவம், ஆங்கிலக் கல்வி, நவீனத்துவம், பகுத்தறிவுவாதம், சட்டசபையில் முஸ்லிம்களின் இனவாரிப் பிரதிநிதித்துவம், நமது உரிமைகளை வென்றெடுக்கும் போக்கு, முஸ்லிம்களின் உயர்கல்விக்கென தனிக் கல்விகூடம் அமைத்தல் என்ற சித்திலெவ்வையின் தெளிவான அபிலாஷைகள், சேர் செய்யித் அஹமத்கானால் இந்தியாவில் ஏற்கனவே திட்டமிடப்பட்டிருந்தவைகளாகும். எம். சி. சித்திலெவ்வை தனது சமூக முன்னேற்றத்திற்காகத் தான் வரித்துக்கொண்ட அபிலாஷைகளை எழுத்துக்களில் வடித்தார். அவரது சாதனைகள் குறிப்பிடத்தக்கனவாயுள்ளன என்ற சித்திலெவ்வையின் வாழ்க்கை சரிதை ஆய்வாளர்களில் ஒருவரான எஸ். எம். கமால்தீன் கருத்து (1990) மனங்கொளத்தக்கது.

சித்திலெவ்வை "முஸ்லிம் நேசன்" மூலம் (ஆ.1882) முஸ்லிம் சமூக மேம்பாட்டிற்கான எழுத்துப் பணிகளை ஆரம்பித்தார். ஆங்கிலம், தமிழ் ஆகிய மொழிகளில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்த சித்திலெவ்வை இஸ்லாமிய நெறிமுறைகளிலும் ஆழமான அறிவுடையவராக இருந்தார். அவரது எழுத்துக்களில் சமய சீர்திருத்தமும், மூட நம்பிக்கைகளுக்கு எதிரான போக்கும் வெளிப்பட்டன. காலம் கடந்த அர்த்தமற்ற சம்பிரதாயங்களிலிருந்து தனது சக இனத்தை விடுதலையடையச் செய்வதற்கான முயற்சியையும் அவரது எழுத்துக்கள் பிரதிபலித்தன.

ஆன்ம ஞானத்துறையிலும் சித்திலெவ்வை தமது எழுத்தாற்றலைப் பயன்படுத்தியுள்ளார். மறைவான ஆன்மீக ஞானக்கருத்துக்களை "ஞானதீபம்" (1892) பத்திரிகை மூலம் அவர் வெளியிட்டு வந்தார். ஆன்மீக ஞானத்துறையில் சித்திலெவ்வை எழுதியவற்றுள் அவரது "அஸ்ராருள் ஆலம்" (1897) முக்கியமான இடத்தைப் பெறுகிறது. மறைபொருளான ம:ரிபாவைப் பற்றி இலங்கையர் ஒருவரால் எழுதப்பெற்ற சிறந்த நூலென இதனைப் போற்றுவர். முகிதீன் இப்னுல் ஆறவி, அப்துல் வஹ்ஹாப் ஷ:ராஸி முதலிய தலைசிறந்த சூபிஞானியரின் சிந்தனைகளை ஆதாரமாகக் கொண்டு அஸ்ராருள் ஆலத்தை அவர் உருவாக்கினார்.

அவர் எழுதிய அறபுமொழி இலக்கண நூல்களையும் இங்கு முக்கியமாகக் குறிப்பிடலாம். "அல்ஹிதாயத்துல் காசிமிய்யாத்" (1891) "துஹ்பத்துன் நஹ்ப்" போன்ற அறபுத் தமிழில் எழுதப் பெற்ற அறபு இலக்கண நூல்களும் சிறப்பாகக் குறிப்பிடப்படுகின்றன. அவர் எழுதிய இந்நூல்கள் அவரது அறபுமொழிப் பற்றுக்கும் அறபு இலக்கண ஞானத்திற்கும் சான்றாக உள்ளன. ஏ. இக்பாலின் மறுமலர்ச்சித் தந்தையில் (1971) இவ்விடயங்களை விரிவாகக் காணலாம்.

*செய்தி நிர்வாக ஆசிரியர்*

# இரா. மு. நாகலிங்கம்

– தயாளன் –

திரு. நாகலிங்கம் அவர்கள் கண்டியில் பிரபல வர்த்தக பிரமுகராக விளங்கியவர் சிறு கைத்தொழிற்றுறையில் ஆர்வம் மிகுந்த திரு. நாகலிங்கம் கண்டியிலும் பிறபகுதியிலும் பல சிறு கைத்தொழில்களை நிறுவினார். அவருடைய முயற்சியைப் பின்பற்றி இன்று கண்டியில் பல சிறு கைத்தொழில் நிறுவனங்கள் இயங்கி வருகின்றது.

ஏனைய பெரும்பாலான வர்த்தகத்துறையாளர் போன்று திரு. நாகலிங்கம் வர்த்தகத்துறையிலேயே தமது வாழ்க்கையை அர்ப்பணித்து விடவில்லை. பல்வேறு சமூக, கலை, இலக்கியப் பணிகளில் அவர் ஊக்கத்துடன் ஈடுபட்டு பல அளப்பரிய தொண்டுகளை ஆற்றினார். இன்று இந்தியாவில் வாழும் திரு. நாகலிங்கம் அவர்களின் சமூகப்பணிகளை நினைவு கூறுவது பொருத்தமுடையதாகும்.

### "செய்தி" பத்திரிகை

திரு. நாகலிங்கம் அவர்கள் இலங்கையில் தமிழ் பத்திரிகைத் துறைக்கு ஆற்றிய தொண்டின் காரணமாக அவரது பெயர் தமிழ் பத்திரிகைத்துறை வரலாற்றில் என்றென்றும் நிலைத்திருக்கும் அவருடைய முயற்சியால் கண்டியிலிருந்து 10 ஆண்டு காலமாக வெளிவந்த "செய்தி" வாரப்பத்திரிகை அரசியல், பொருளியல், சமூகவியல், இலக்கிய ஆய்வு மற்றும் இலங்கை வாழ் தமிழ் எழுத்தாளர்களின் ஆக்க இலக்கியங்களுக்கு களமமைத்துக் கொடுத்தது. இவ்வாறான ஒரு பத்திரிகை மலையகத்திலிருந்து இதுவரை வெளிவரவில்லை என்றும் கூறிவிடலாம். இப்பத்திரிகையிடம் பெற்ற பல்துறை சார்ந்த ஆய்வுக் கட்டுரைகள் ஆராய்ச்சி மாணவர்களுக்குப் பெரிதும் துணை புரியும் மலையக மக்களின் அபிலாஷைகளுக்கு "செய்தி" பத்திரிகை அமைத்துக் கொடுத்த களத்தை இன்று வேறு எந்த பத்திரிகையும் ஈடுசெய்யவில்லை எனலாம். இலங்கையிலும் தமிழகத்திலும் வாடுகின்ற பலதரப்பட்ட அறிஞர்கள், எழுத்தாளர்கள், கவிஞர்கள் மற்றும் சமூக நல தாபனங்களுடன் நெருங்கிய தொடர்பு பூண்டவராக திரு. நாகலிங்கம் விளங்கினார். தமிழக அறிஞர் பலரை இலங்கைக்கு வரவழைத்து கௌரவித்த பெருமைக்கு உரியவர் திரு. நாகலிங்கம் அவர்களே ஆவார்.

### கி. வா. ஜா. வுக்கு மணிவிழா

முதுபெரும் தமிழக எழுத்தாளரும் தமிழ் அறிஞருமான காலஞ்சென்ற கி. வா. ஜகந்நாதன் அவர்களுக்கு கண்டியில் ஒரு மாபெரும் மணிவிழா ஒன்றை நடாத்தினார் பல மாண்பு மிகு அமைச்சர்களும் இந்த மணிவிழாவில் கலந்து கொண்டார்கள் அத்துடன் தலைசிறந்த எழுத்தாளர் அகிலன் போன்றவர்களையும் இலங்கைக்கு வரவழைத்துப் பல நிகழ்ச்சிகளில் கலந்து கொள்ளச் செய்தார்.

### தனிநாயக அடிகளாரும் நாகலிங்கமும்

திரு. நாகலிங்கம் அவர்கள் தந்தை தனிநாயக அடிகள் மீது மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அடிகளாரின் தமிழ் அபிமானமும் தமிழ் ஆராய்ச்சித்துறையில் அவரது கடுமையான உழைப்பும் தமிழியல் ஆய்வினை உலகெங்கும் பரப்புவதில் அடிகளார் எடுத்த முயற்சிகளும் திரு நாகலிங்கம் அவர்களை பெரிதும் கவர்ந்தன. இருவரும் அடிக்கடி சந்தித்து தமிழிலக்கிய கலாசார மேம்பாடு பற்றி அடிக்கடி கலந்துரையாடல்கள் நடத்தினர்.

### சங்கரதாஸ் சுவாமிகளுக்கு நினைவு விழா

நாடகப் பெருந்தகை சங்கரதாஸ் சுவாமிகள் அவர்கள் தமிழ் நாடக வளர்ச்சிக்கு ஆற்றிய தொண்டுகளை யாவரும் அறிவர். அன்னாருக்கு நினைவு விழா ஒன்றினை கண்டியில் நடாத்திப் பெரும் பாராட்டைப் பெற்றவர் திரு. நாகலிங்கம் அவர்கள்.

1983 ஆம் ஆண்டு இந்தியா சென்று இலங்கை மீண்டு வந்த திரு. நாகலிங்கம் அவர்கள் தாம் வாழ்நாள் முழுவதும் சேகரித்த நூற்றுக்கணக்கான கிடைத்தற்கரிய நூல்களை மலையகப் பாடசாலை ஒன்றிற்கு அன்பளிப்புச் செய்தமை குறிப்பிடத்தக்கது. உண்மையில் வர்த்தக சமூகத்தினருக்கு திரு. நாகலிங்கம் அவர் ஒரு முன்னுதாரணமாக விளங்கி தமிழ், மொழி இலக்கிய மேம்பாட்டுக்கும், சமூக முன்னேற்றத்திற்கும் ஆற்றிய தொண்டுகளை இவ்விடத்து நினைவுகூறுவது சாலப்பொருந்தும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜன் 'புகழ்' ஓர் அணையாத தீபம்

எஸ். எம். ஏ. ஹசன்

*பீ. டி. ராஜன் என்ற பெயர் மலையகத்தில் மறக்க முடியாத ஒரு பெயராகும். மலையகக் கல்விக்கு அவர் ஆற்றிய பணி மகத்தானது. கல்வித் துறையில் மாத்திரமல்ல, சமூகத் துறையிலும் அவர் பெயர் நிலைத்திருக்கும். 68, 69களில் அவரோடு நானும் இணைந்திருந்தேன். அன்று "அம்மா" என்ற பத்திரிகையை நான் வெளியிடுவதற்குத் தூண்டுகோலாக இருந்ததோடு அதன் வளர்ச்சியிலும் பங்கு கொண்டவர். அன்னாரது நினைவலைகளை 1939 ஆம் ஆண்டு முதல் பழகி வந்தவரும், அவரோடு நெருக்கமானவருமான எஸ். எம். ஏ. ஹசன் அவர்கள் இக்கட்டுரையை செய்திமடலுக்காக எழுதித் தந்தார். அவருக்கு எங்களின் நன்றிகள்.*

*– ஆசிரியர்*



திரு. பி. டி. இராஜன் ஓர் உயரிய இலட்சியவாதியாக வாழ்ந்தவர். அரை நூற்றாண்டுக்குக் குறையாத அவரது வாழ்க்கை கண்டி நகரை மையமாகக் கொண்டிருந்தது. மலையகத்தின் தலைநகரான கண்டியில் அவரால் நிறைவேற்றப்பட்ட சாதனைகள் பல. எத்தனையோ சவால்களுக்கு மத்தியில் சமாதான வழிமுறைகளைக் கையாண்டு தமது இலட்சியங்களில் வெற்றி கண்ட ஒரு மாமனிதர். சகல இன மக்களுடனும், சகபாடியாக வாழ்ந்தவர். தூரநோக்குக் கொண்டவர், சிந்தித்துச் செயலாற்றுபவர். ஒரு நல்ல கல்விமான், சமூக சேவையாளன். இவற்றின் பிரதிபலிப்பாகவே இன்று நாம் கண்டி மாநகரில் காணும் அசோகா வித்தியாலயம், அசோகா ஹாஸ்டல், அசோக பவான், என்பனவாகும்.

1933ம் ஆண்டு திரு. பீ. டி. ராஜன் பாரதநாட்டிலிருந்து இலங்கைக்கு வந்தார். கண்டியில் கிங்ஸ்வூட் கல்லூரியில் ஓர் ஆசிரியராகப் பணியை ஏற்ற அவர் பிற்காலத்தில் வசதி குறைந்த மக்களின் நலனைக் கருத்திற் கொண்டு ஒரு பாரிய கல்லூரியை நிரந்தரமாக நிறுவி வைத்தார். இக்கல்லூரியின் மூலமாகத்தான் மலையக மக்களின் கல்வி கலாசார சமூக மேம்பாட்டினை வளர்க்க முற்பட்டார்.

திரு. பீ. டி. ராஜன் இலங்கைக்கு வந்த காலத்தில் இலங்கையும் இந்தியாவும், பிரித்தானியாவின் ஆட்சியின் கீழ் இருந்து வந்தது. இவரது இளமைப் பருவம் இந்திய விடுதலைப் போராட்டக் காலமாகும். காந்தி, நேரு, ஜின்னா போன்ற தலைவர்கள் இந்திய விடுதலை இயக்கத்தில் மும்முரமாக ஈடுபட்டிருந்தனர். அத்தகைய தலைவர்களின் விடுதலை இயக்க உணர்வுகளுடன் திரு. ராஜனும் இலங்கையில் காலடி எடுத்து வைத்தார். இங்கு வந்து அவர் போராடவில்லை. ஆனால் தனது தாயகத்திலிருந்து இங்கு வந்து உடமைகள் குன்றி உரிமைகளின்றி வாழ்ந்து வந்த மக்களின் மனோநிலைகளை கண்டறிந்தார். சமத்துவமற்ற இந்த மனோநிலை கொண்ட மக்களின் உள்ளங்களில் உணர்ச்சியும் உத்வேகமும் கொள்ளத்தக்க வழிமுறைகளை காண்பதில் தனது சிந்தனைகளையும் செயற்பாடுகளையும் உறுதியுடன் முன்வந்து செயற்படுத்தினார்.

இரண்டாவது உலக யுத்தம் தொடர்ந்து முடிவுற்றது. அப்போதும் பீ. டி. ராஜன் இலங்கையில் இருந்தார். இந்தியாவும் இலங்கையும் சுதந்திரம் பெற்ற பின்னரும், ஏன், மலையக மக்களின் பிரஜா உரிமை பறிக்கப்பட்ட பின்னரும் கூட அவர் இங்குதான் நிரந்தர பிரஜையாக வாழ்ந்தார். இந்தியாவும், இலங்கையும் பிரித்தானிய ஆட்சிக்குட்பட்ட காலத்தில் இந்தியக் கல்விமான்கள் இந்த நாட்டின் கல்வித்துறையில் சேவையாற்றினர். அவ்வாறு வந்தவர்கள் யுத்தத்தையும் சுதந்திரத்தையும் தொடர்ந்து தாயகம் சென்றபோதுங் கூட திரு. பீ. டி. ராஜன் இந்த நாட்டிலேயே கண்டியைத் தனது வாழ்விடமாக அமைத்துக் கொண்டார். காரணம் வாழ்க்கை வளங்குறைந்த வசதிகளற்ற இருளடைந்த இதயங்களுடன் வாழ்ந்து வந்த மலையக மக்களிடையே கல்வியை வளர்த்து நற்பண்புகளையும் நாணயமான நாகரீக நல்வாழ்வையும் காணவேண்டுமென்பதே அவரது பேரவாவாக இருந்தது.

அதற்காகத் தன்னையொரு அரசியல்வாதியாகவோ மக்கள் தலைவனாகவோ மாற்றிக் கொள்ள முனையவில்லை. "சமுதாயத் தொண்டை எந்த நிலையிலிருந்தும் நிறைவேற்றலாம் என்ற மனோதத்துவமான தூய சிந்தனையுடன்தான் அவர் தொழிற்பட்டார். சிந்திக்கக் கூடிய ஒரு சமுதாயத்தை உருவாக்க வேண்டுமென்று அவரது இலட்சியத்தை தனது வாழ்நாளிலே கண்டு கொண்டார்.

மலையக மக்களின் தலைவர்களெனத் தோன்றியவர்கள் பலர், தோன்றி மறைந்தவர்கள் பலர். இராஜனும் தோன்றினார், மறைந்தார். "தோன்றிற் புகழோடு தோன்றுக" என்பதற்கு ஒப்ப மலையக மக்களிடையே மங்காப் புகழுடன் இன்றும் வாழ்ந்து கொண்டிருக்கிறார். அன்னார் ஏற்றி வைத்த அசோகா தீபம் என்றும் அணையப் போவதில்லை, எனவே இராஜனின் புகழ் நாமமும் அணையா விளக்காகத் தான் நின்று நிலைக்கும்.

வாழ்க்கையை வாழ்ந்து காட்டியவர்தான் திரு. பீ. டி. இராஜன். அன்னாரின் வாழ்க்கையின் ஒவ்வொரு அம்சமும் வரலாற்றுச் சான்றுகளாக அமைகின்றன. அவை தனித்தனியே ஆய்வு செய்யப்படவேண்டியவை. இந்த நூற்றாண்டு மக்களின் தலைசிறந்த வழிகாட்டியாக அவை அமையப் பெறும்.

சாதி மதம் தனிப் பெரும் பூசலைப்
பகை தடிந் தோட்டிய பண்புள்ள நெறியில்
தரம் பிரித்தாளும், தன்மையை வெறுத்து
இந்து முஸ்லிமான் இதமுடைச் சிங்களர்
சொந்த எம்நாட்டுச் சோதரென்னச்
சமரசங் கண்ட தத்துவ ஞானி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கண்டி பூரணவத்தை 18/13ச் சேர்ந்த இரா. அ. இராமன் ஆகிய என்னால் கண்டி டி. எஸ். சேனாநாயக்க வீதி, இல: 302, லகா இம்ப்ரஸில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.